விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 6 ஷபா 27 இதழ் 127

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20—6—82

## 'பிரபா' பிணை மீண்டும் நிராகரிப்பு: 'உமா' மனு திங்கள் விசாரணை

### மேல் நீதிமன்றம் செல்ல ஆலோசனை

[சென்னை]

சென்னையில் கைதாகி காவலிலிருக்கும் பிரபாகரன் அல்லது கரிகாலன், சிவகுமாரன் அல்லது ராகவன், சிவனேஸ்வரன் அல்லது நிரஞ்சன், ஜோதீஸ்வரன் அல்லது கண்ணன் சின்னச்சோதி அல்லது குருநாதன் ஆகியோரைப் பிணையில் விடுமாறு கோரி சென்னை செசன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் நேற்று நிராகரிக்கப்பட்டது,

இவர்கள்மீதானவிசாரணைகள் இன்னமும் முடிவடையாமல் இருப்பதால் உடனடியாக இவர்களை விடுதலை செய்யக்கூடாது என அரசு வழக்குத்தொடுநர் தெரிவித்ததையடுத்து செசன்ஸ் நீதிபதி பிணை மனுவை நிராகரித்தார்.

இதே வேளையில் உமா மகேஸ்வரன் அல்லது முகுந்தனை பிணையில் விடுவது குறித்த மனுமீது விசாரணை நடத்த அவகாசம் அளிக்குமாறு அரச வழக்கறிஞர் கோரியதையடுத்து அம் மனுமீதான விசாரணையை நீதிபதி மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைத்தார்.

இந்த இளைஞர்களுக்காக சிரேஷ்ட வழக்கறிஞர்களான திருவாளர்கள் பஞ்சாபிசேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோருடன் 12

(8-ம் பக்கம் பார்க்க)

# ★ பலாத்காரத்தினால் ஆட்சி மாறினால் ★

# புரட்சி மூலம் அரசாங்கத்தை

# கைப்பற்றவும் ஐ. தே. க. தயார்

## 83ல் பொதுத் தேர்தல்; 84ல் ஜனாதிபதி தேர்தல்

### தம்பதெனியாவில் ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

1983ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலும் 1984ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் நடைபெறும். இத்தேர்தல்களில் ஐக்கிய தேசியகட்சியே வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனினும் பலாத்காரம் மூலம் எவரும் ஆட்சியைக் கைப்பற்றினால் புரட்சி மூலம் அரசை மீண்டும் கைப்பற்றவும் ஐக்கிய தேசியகட்சி ஆயத்தமாக இருக்கிறது.

தம்பதெனியா நகரசபை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி திரு, ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:

''மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிபோவதை நான் ஒருபோதும் அனுமதிக்

[8-ம் பக்கம் பார்க்க]

## பண்டாரநாயக்கா கொலைவழக்கிற்காக சிறிமா சட்டத்தை திருத்த முயற்சித்தார்

கொழும்பு)

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் பௌத்தபிக்கு ஒருவருக்கு மரணதண்டனையும், மற்றொரு பிக்குவுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. அப்போதுள்ள சட்டங்கள் அன்றையநிலைக்கு சாதகமாக இல்லாததினால் திருமதி பண்டாரநாயக்கா சட்டங்களில் திருத்தம்கொண்டுவந்தார். இதனை பெரும்பான்மையோர் எதிர்த்ததால் பின்னர் வாபஸ்பெற்றார்.

குருநாகலில்நடந்தமாவட்ட ஐ. தே. க. கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் தடம்புரண்டது

### மலையகச் சேவை பாதிப்பு

(கொழும்பு)

தியத்தலாவைக்கும் பண்டாரவளைக்கும் இடையே நேற்று பிரயாணிகள் ரயில் ஒன்று தடம்புரண்டதை அடுத்து மலையக ரயில்சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து பதுளைக்குச் சென்றுகொண்டிருந்த ரயில் நேற்றுப்பகல் 2 30 மணியளவில் தடம்புரண்டதை அடுத்து இப்போது தியத்தலாவைக்கும் பண்டாரவளைக்கும் இடையே பிரயாணிகள் பஸ்மூலம் ஏற்றி இறக்கப்படுகிறார்கள் (ஜ)

## யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடி: பொலிஸார் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் பொதுமக்களின் நடமாட்டத்திற்கு இடையூறு விளைவித்துவந்த வாகனப் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்குமுகமாகப் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சில பிரதான வீதிகளில் பொலிஸார் ஆயுதபாணிகளாக நின்று கடமையாற்றினர். பொலிஸாரின் சேவை யாழ். நகரிலுள்ள மற்றும் ஒருவழிப் பாதைகளுக்கும், முக்கிய சந்திகளுக்கும் விஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆர்ஜென்டீனா இடைக்கால அதிபர்

புவனர்ஸ் அயர்ஸ் ஜூன் 19

ஆர்ஜென்டீனா இடைக்கால அதிபராக முன்னாள் உள்துறை அமைச்சர் அல்பிரடோ நியமிக்கப்பட்டுள்ளார்.

## நடிகை 'படாபட்' காலமானார்

சென்னை ஜூன் 19

பிரபல சினிமா நடிகை படாபட் ஜெயலட்சுமி நேற்று

[8-ம் பக்கம் பார்க்க]

## சேர்க்கோன் றவல்ஸ் அன் ரூவோஸ் லிமிற்ரெட்

சௌகரியமான உங்கள் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு:

★ விமான சீட்டுகள் (விரும்பும் விமானத்திற்கு)

★ தங்கு விடுதி வசதிகள்

★ உல்லாச பயணங்கள்

எவையாயினும் எம்முடன் தொடர்பு கொண்டு உங்கள் நேரத்தையும் பணத்தையும் சேமித்துக் கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்க:

எ. செல்லையா (முகாமையாளர்),

சேர்க்கோன் றவல்ஸ் அன் ரூவோஸ் லிமிட்.

2, மெயிட்லன்ட் கிரசண்ட், கொழும்பு 7.

ZIRCON TRAVELS & TOURS LTD.

2, MAITLAND CRESCENT COLOMBO 7)

தொலைபேசி இல: 94726 தந்தி: ZIRCONSAL

(3603)

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்: திருநிறைசெல்வன் பாலசுப்பிரமணியம்

மணமகள்: திருநிறைசெல்வி கேதாரகௌரி

காலம்: 23-06-82 புதன்கிழமை மாலை 6.02-7.58 மணி.

இடம்: ''ஞானகிரி'' மல்லாகம்.

வரவேற்பு உபசாரம் மணமகனில்லம்: 25-06-82 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணியளவில்.

[உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்].

சு. நடராசா
சட்டத்தரணி
யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர்
திருமதி சத்தியவதி நடராசா
''சத்தியஸ்தான்''
மல்லாகம்.

நம சிவப்பிரகாசம்
சட்டத்தரணி
திருமதி ஞானலட்சுமி சிவப்பிரகாசம்
''ஞானகிரி''
மல்லாகம்.

[3599]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கில், திருநெல்வேலி சந்தைசந்திக்கும் இராமசாமிப்பரியாரியார் வீட்டிற்கும்இடையில் இரண்டு பரப்புக்காணியுடன் ஒரு புதிய வீடு விற்பனைக்குஉண்டு (எல்லாவித வசதிகளும் உண்டு.) அ. நித்தியானந்தராசா (நயினார்), 307, பலாலிவீதி, கந்தர் மடம். 3573

புனரமைக்கப்பெற்ற HONDA C/90, மொடல்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3569

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், சகல வசதிகளும் கிடைக்கக்கூடிய கேந்திர ஸ்தானத்தில், 5 1/4, பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு-மல்ரிசேவிசஸ், த. டன்லப் ஸ்ரோஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3570

மூன்று பரப்புக் கல்வீடு வளவு விற்பனைக்குண்டு தொடர்பு: வ. சின்னராசா, நல்லதம்பி வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. 3568

மேட்டு நிலத்துடன் கூடிய 22 பரப்பு நெற்காணி பிரதான வீதி, நாயன்மார்கட்டில் விற்பனைக்கு உண்டு. 2, செட்டித்தெரு ஒழுங்கை. நல்லூர் உடன் தொடர்பு கொள்ளவும். (582)

யாழ்ப்பாணம் டவுண்காணி 4 பரப்பு. குடியிருப்பு சூழல், இருபக்கம் புதிய சுற்றுமதில (15 நிமிட நடை தூரம்-பெரியகடை) தொடர்பு நேரில் 19, கடைச்சாமி வீதி. போன்: 335 [3595]

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து 400 யார் தூரத்திற்குள் வீடு கட்டுவதற்கேற்ற 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு பரப்பு ஒன்று ரூபா 37,000/-க்கு மேற்பட்ட கோரிக்கைகள் மட்டும் பரிசீலனை செய்யப்படும் விபரங்களுக்கு: திரு. வை. விஜயபாஸ்கரன், நகரசபை அலுவலகம், சாவகச்சேரி, தொலைபேசி: 276, சாவகச்சேரி. [3598]

நவாலியில் நவாலி – வட்டுக்கோட்டை வீதியில் வீட்டுடன் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 117, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். [3601]

யாழ் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக இல. 204, கஸ்தூரியார் வீதியில் இரு துண்டுக் காணிகள். தொடர்பு: பொ. பாலசுப்பிரமணியம், 204, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [3600]

## தேவை

அனுபவமுள்ள 'வெல்டேர்ஸ்' ''ரேணேர்ஸ்'' ''மோல்டேர்ஸ்'' குறைந்தது பத்து வருட அனுபவமுள்ள மின்னியலாளர்கள் தேவை. அந்தரங்கமாக விண்ணப்பிக்கவும். எல்மோசன் ஹரன் ஸ்ரீல் கொம்பனி லிமிட், பெரிய விளான், பண்டத்தரிப்பு 3589

நெடுந்தூர பயண தனியார் பஸ்கள் தரித்து நிற்பதற்கு இடவசதியும் பதிவுக்கந்தோரும் யாழ். நகர மத்தியில் உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்க. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3578

## தேவை

தையல் அனுபவமுள்ள பெண் தொழிலாளர் தேவை. விண்ணப்பிக்கவும். அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. அஜந்தாஸ், 54, பெரியகடை, யாழ்ப்பாணம். [3590]

## சேவை

இலவசம் வீடு உடைத்த சுண்ணும்பு மக்கிகள் போதிய அளவு உண்டு. 6/3, கன்னுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3567

## தவறிவிட்டது

18-6-82 மெயில் புகையிரதத்தில் வவுனியாவில் பாஸ்போட், உடுப்புகள் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய பாக் ஒன்று தவறிவிட்டது, எடுத்தவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் த. கிருஷ்ணபவான், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [3604]

## பயிற்சி

றேடியோ – டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், Hotel Management மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 25-6-82 அனைவரும் சேரலாம், நேரில் வரவும் நாஷனல் அக்கடமி, மொம்சாக்கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3577

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல் செய்முறை அறிமுறைப்பயிற்சி வகுப்புக்கள் (03-7-82)இல் ஆரம்பம். தொடர்பு: C. E. T. ஐலன்ட் இன்ஸ்ரியூட், (விகாரைக்கு முன்பாக) 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3559


'பியர்'
அதன் முழுச் சுவையுடன்.
லயன் லாகர்



ரூபா 15/75

MASTERS


## ஏல விற்பனை அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் உற்பத்திக் குறைபாடுகளுள்ள புடவை வகைகள் எமது தலைமைக் காரியாலயத்தில் 21-06-1982 திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

மல் வேட்டிகள்
பரமாஸ் சால்வைகள்
சாரங்கள்
சேலைகள்
கைத்தறி வேட்டிகள்
கன்வஸ் துணிகள்
மல் வெட்டுத் துண்டுகள்

இங்ஙனம்
பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி.
யாழ்ப்பாணம்.

14-06-1982, (3593)

## ரூபவாஹினியில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்

[கொழும்பு]

இலங்கைத் தொலைக்காட்சிச் சேவையான 'ரூபவாஹினி'யில் பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் காட்டப்படவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை 'ரூபவாஹினி' சேவையின் அதிபர் திரு. என். ஜி. பெரேரா தனியார் நிறுவனங்கள் பலவற்றுடன் தொடர்புகொண்டு செய்துவருகின்றார்.

தனியார் நிறுவனங்களின் ஆதரவுடனேயே பலமுக்கிய நிகழ்ச்சிகளை தொலைக்காட்சி நேயர்களுக்கு வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஸ்பெயினில் நடைபெறும் உலகக் காற்பந்தாட்டப்போட்டி, லாஸ் ஏஞ்சலில் நடை பெறவுள்ள ஒலிம்பிக் போட்டி ஆகியனவற்றையும் ஒளிபரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. [கி]

## பஸ்தாக்குதல் வழக்கு:

## ரூ. 500 நஷ்டஈடும் எச்சரிக்கையும்

[சாவகச்சேரி]

பஸ், தாக்குதல் வழக்கில் வழக்காளிக்கு 500 ரூபா நஷ்டஈடு வழங்குமாறுகூறி எதிரிகளை நீதிபதி எச்சரித்தார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 81 மார்ச் 19ல் வரணியைச் சேர்ந்த முருகப்பன் நடேசு என்பவருக்கு அடித்து அவரிடமிருந்த 500 ரூபாவை பறித்ததாகக் குற்றஞ்சாட்டி அவ்வூரைச் சேர்ந்த கணேசு, இராமு என்பவர்களுக்கெதிராக குற்றஞ்சாட்டிபட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானுர் இவ்வழக்கில் முருகப்பன் நடேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது: செயினுல் அடித்ததும் நான் விழுந்துவிட்டேன். சற்றுத்தூரத்தில் பஸ் நிற்பாட்டப்பட்டதும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது, அங்கிருந்து பொலிசார் காயமிருந்ததால் யாழ் வைத்தியசாலைகு அனுப்பினர். எதிரிகள் பொலிஸ் நிலையத்திற்கு பஸ்சில்வரவில்லை.

1ம் எதிரி அடிக்கும்போது 2ம் எதிரிகலாலால் உதைத்தார், யாழ், வைத்தியசாலையில் சாவகச்சேரிப் பொலிசார் வந்து எனது வாய்முறைப் பாட்டைப் பதிந்துள்ளனர்.

எதிரிகள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி எஸ். தம்பிரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது: சம்பவம் நடந்த பொழுது பொலிசார் சாட்சி யார் என்று கேட்டதற்கு வீரகத்தி என்று கூறினேன். பஸ் சாரதி யார் என்பதைக்கூறவில்லை. 500 ரூபா பறித்தது பற்றிப் பொலிஸ் முறைப்பாட்டில் கூறியிருக்கின்றேன். 1ம் எதிரி எனது மனைவியின் சகோதரன் மூன்றுபேரில் ஒருவரைத்தான் தெரியாது என்றேன். கண்டால் அவரையும் அடையாளம் காட்டுவேன். எனக்கும் இவர்களுக்கும் எந்தவித பிரச்னையுமில்லை. காசு சட்டைப் பையிலிருந்து எடுத்தது உண்மை. வைத்திய அதிகாரி கேட்டதற்கும் என்னைத் தாக்கியது கணேசுவும் இராமும் என்று கூறியுள்ளேன்.

நீதிபதி வழக்கை இடைநிறுத்தி அபகரித்தபணத்தைச் செலுத்திச் சமரசமாகப்போக விருப்பமா எனவினுவியபோது எதிரிகள் ஒப்புக்கொண்டனர்.

நீதிபதி எம். எச். காரியப்பர் 500 ரூபாவை நஷ்ட ஈடாகக் கட்டும்படி எதிரிகளுக்குப் பணித்து எதிரிகளையும் எச்சரிக்கை செய்தார். [க]

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### சோலைவரி 2-ம் கந்தாயம் - 1982

1982ஆம் ஆண்டு 2-ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 30-6-82-ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள், குடியிருப்புக் காணிகள் | — 15% வீதம் |
| இவையல்லாத காணிகள் | — 20% வீதம் |

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் பொழுது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப் பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 17-6-82. 3591

## பெட்வோட் (BED FORD) வான் விற்பனை

33 ஸ்ரீ 5401 இலக்கமுடைய 21 அந்தர் எடையுள்ள பெட்வோட் வான் விற்பனை செய்வதற்காக கட்டுப் பணத்துடன் கூடிய இலட்சினையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. படிவங்களும், விபரங்களும் தலைமையலுவலகத்தில் பெற்றுக்கொள்வதுடன், காரியாலய நேரங்களில் வாகனத்தைப் பார்வையிடலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி: 30-06-1982 மாலை 4-00 மணிக்கு.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

3588

## இன்று

நாடக, அரங்கக் கல்லூரியின்

### நாடகவிழா

3-ம் வார இரு நாடகங்கள்

தீபி ஜுவல்லர்ஸ் ஆதரவில்

× நா. சுந்தரலிங்கத்தின் **அபசுரம்**

× ஞானியின்

**குருசேத்திரோபதேசம்**

வீரசிங்கம் மண்டபம் - மாலை 6-30

3597 ரிக்கற் ரூபா 5/- மட்டுமே

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சின்மய பாரதிபாடசாலைவருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறுகிறது

வர்த்தக பிரமுகர் திரு எஸ் தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும் யாழ் உடற்கல்வி அதிகாரி திரு வி தங்கராசா, மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ் தனஞ்செயன், திரு. வி இராசையா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர். சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரி முன்னுள் அதிபர் திருமதி அருணுசலம் குத்துவிளக்கேற்றிபோட்டியை ஆரம்பித்துவைப்பார். திருமதி பி. தில்லைநாதன் பரிசில்களை வழங்குவார். (இ)

# "தெ. அத்லாந்திக்கில் அமைதிநிலவ பிரி. முற்றுகை நீங்கவேண்டும்"

## ஆர்ஜென்டீனு அரசு அறிவிப்பு

புவனேர்ஸ்அயர்ஸ், ஜூன் 19

ஆர்ஜென்டீனு இராணுவ அரசாங்கத்தின் புதிய நிர்வாகியாக ஜெனரல் கிறிஸ்டீஞே நிக்கலாய்டெஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஜெனரல் நிக்கலாய் இப்பதவியில் தற்காலிகமாகவே அமர்த்தப்பட்டிருக்கின்ருரென்றும், விரைவில் புதிய அதிபர் ஒருவர் தெரிவுசெய்யப்படுவாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கோரிக்கை

போக்லண்ட் தீவுகளைச்சுற்றி பிரிட்டன் அமைத்திருக்கும், ஆகாய கடல் முற்றுகைகளும், ஆர்ஜென்டீனு மீது மேற்கொள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளும் நீக்கபபடவேண்டுமென புதிய ஆர்ஜென்டீனு நிர்வாகி ஐக்கிய நாடுகள் சபையைக் கோரியுள்ளார்.

தெ. அத்திலாந்திக் பகுதியில் மேற்குறிப்பிட்ட தடைகள் நீக்கப்படுவதன் மூலமே பூரண அமைதியை ஏற்படுத்த முடியுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### புதிய ஜனுதிபதி

புதிய ஜனுதிபதியான ஜெனரல்கிறிஸ்டீஞே நிக்கலய்டெஸ் கம்யூனிஸப் போக்கில் விருப்பற்ற ஒருவர் எனத்தெரிவிக்கப்படுகின்றது. கிரேக்கநாட்டு வம்சாவளியினரான 57 வயதுடைய ஜெனரல் நிக்கலாய்டெஸ், போக்லண்ட் தகராற்றின்போது புவனேர்ஸ்அயர்ஸின் முதலாவது இராணுவப் பிரிவுக்குத் தலைமைதாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரிவு எதிர்பார்த்தளவு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

### திருப்பி அனுப்பப்பட்டனர்

பிரிட்டிஷ் துருப்புக்கள்சிறைவைத்துள்ள ஆர்ஜென்டீனு துருப்புக்களை புவனேர்ஸ் அயர்ஸுக்கு திருப்பி அனுப்புவதற்கான கப்பல் சேவைக்கு ஆர்ஜென்டீனு அனுமதியளித்துள்ளது. இதனையடுத்துபிரிட்டனின் ஆடம்பரப் பாசறைக் கப்பலான கன்பராவிலும் பெரி.நோர்லண்ட்என்ற மற்றுமொரு பாசறைக் கப்பலிலும் போர்க்கைதிகள் சிலர்அனுப்பி வைக்கப்பட்டுள்ளனரென அறிவிக்கப்பட்டது. (கி)

---

போக்லண்டில்'யூனியன்ஜக்,

## இளவரசரோ இன்னும்தரை இறங்கவில்லை

லண்டன், ஜூன் 19

போக்லண்ட் தீவுகளில் பிரிட்டிஷ் தேசியக்கொடியான 'யூனியன் ஜக்' மீண்டும் ஏற்றப்பட்டுள்ள போதிலும், அங்குள்ள கடற்படையில் அங்கம் வகிக்கும் இளவரசரான அன்ட்ரூ இன்னும்போட்ஸ்ரான்லியில் தரையிறங்கவில்லை.

பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு இரண்டாவது வாரிசான இளவரசர் அன்ட்ரூ போக்லண்டிலுள்ள விமானந் தாங்கிக் கப்பலான இன்வின்சிபிலில் விமானியாகப் பணி புரிகின்ருர்.

உப லெப்டினன்ட் தரத்திலுள்ள இளவரசர் அன்ட்ரூ நீர்மூழ்கிகளை மூழ்கடிக்கும் 'சீ கிங்' ஹெலிகாப்டர்களில் தினமும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ருர். ஆகையினுயே இவர் தரை இறங்க முடியாதிருக்கின்றதென அறிவிக்கப்படுகிறது [கி]

---

## இவ்வருடத்தில் மிகப்பெரிய ரயில் விபத்து!

### உகண்டாவில் 200 பேர் பலி

கம்பாலா ஜூன் 19

இவ்வருடத்தில் இதுவரைக்கும் இடம்பெற்ற பெரும்ரயில் விபத்துக்களில் பாரதூரமானது உகண்டாவில் நடைபெற்றுள்ளது. இதில் 200பேர் கொல்லப்பட்டுள்ளரெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 40 ஆண்டுகளில் உகண்டாவில்ஏற்பட்ட பெரு உயிர்ச்சேதம் இதவென அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகரான கம்பாலாவிலிருந்து கிழக்கிலுள்ள நாவல் ஜீசா என்ற இடத்திலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரஸ்தாப ரயிலின் பெட்டியொன்றில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு அதனுல் ஏற்பட்ட வெடி விபத்திஞலேயே இப்பெருஞ்சேதம் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது (கி)

---

## வெடிகுண்டுக்கு சிறுவன் பலி

சென்னை, ஜூன் 19

தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிடர்கள் குடியிருப்பொன்றில் வெடிகுண்டுகள் வெடித்ததால் சிறுவனெருவன் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இச்சப்பவத்தின்போது சிலர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது. (வெ)

---

## துணுக்காயில் கோஷ்டி மோதல்

[கிளிநொச்சி]

துணுக்காயில் நேற்று இரவு இடம்பெற்றகோஷ்டிமோதலை அடுத்து எஸ். சதானந்தன், கே சீவரத்தினம் ஆகிய இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் எஸ் கிருஷ்ணராசா என்பவர் யாழ் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் கே குலதிலகா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி விசாரணை நடத்து வருகிறது (தி)

## கல்விச்சுற்றுலா

[யாழ்ப்பாணம]

அச்சுவேலி கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர் நேற்று முன்தினம் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

வித்தியாசாலை அதிபர் திரு. மு. இராசநாயகம் தலைமையில் இம்மாணவர்கள் வடபகுதியிலுள்ள சரித்திரப்பிரசித்தி வாய்ந்த இடங்களையும், கைத்தொழிற்சாலைகளையும் சென்று பார்வையிட்டனர். [மா—அ]

---

## தென். லெபனுனில் இஸ்ரேலியர் தொடர்ந்து முன்னேற்றம்!

பெய்ரூட், ஜூன் 19

தென்லெபனுனில் ஊடுருவியுள்ள இஸ்ரேலியத் துருப்புக்களின் பீரங்கிப்படைகள் மேலும் முன்னேறிச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முன்னேற்றத்தில் சில சிவிலியன் பகுதிகளும் பீரங்கி வேட்டுகளுக்கு இலக்காகி வருகின்றனவெனவும் தெரிவிக்கப்பட்டது.

### இஸ்ரேலுக்கு ஆதரவு

பெய்ரூட் விமான நிலையத்திற்குச் செல்லும் வீதி, டமாஸ்கஸ் வீதி ஆகியனவற்றிலேயே தற்போது பலத்த சண்டை நடைபெற்றுவருகின்றது. இஸ்ரேலியத்துருப்புக்களுக்கு ஆதரவாக வடதுசாரிக் கிறிஸ்தவ இயக்கத்தவர் நடந்துகொள்கின்றனர். இவர்களின் துணையுடனேயே இஸ்ரேல் தனது முன்னேற்றத்தைத் துரிதப்படுத்திவருகின்றது.

பெய்ரூட்டை தாம் ஆக்கிரமிக்கமாட்டோமென இஸ்ரேல் கூறிவருகின்றபோதிலும், பல இஸ்ரேலிய இராணுவப் பிரிவுகளை பெய்ரூட்டுக்கு அண்மையில் காணக்கூடியதாக விருக்கின்றதெனக் கண்காணிப்புப் படைகள் தெரிவித்தன.

### விஜயம் நீடிப்பு

தற்போது அமெரிக்காவிலிருக்கும் இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனச்சம்பெகின், அங்கு தான் தங்குவதை மேலும் சில நாட்களுக்கு நீடித்துள்ளார். அமெரிக்க இராஜாங்க அமைச்சரான ஜெனரல் ஹெய்க் இஸ்ரேல் – லெபனுன் மோதல் பற்றித்தெரிவிக்கையில். யுத்தம் மோசமடைந்த நிலையிலிருக்கின்றபோதிலும் சமாதானத்தீர்வு காணக்கூடிய சூ நிலையு இருப்பதாகக் கூறியுள்ளார்.

### பெகின் ஆதரவு

இதேவேளை மத்திய கிழக்கில் அணுஆயுதப் பாவனையை மேற்கொள்வதில்லையென்ற மத்திய கிழக்கு நாடுகளின் தீர்மானத்துக்கு இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினும் ஆதரவு வழங்கியுள்ளார்.

### பார்வையாளர் வேண்டும்

பாலஸ்தீன நிலைகள்மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களால் மிகவும் கவலைகொண்டுள்ள ஜனுப் யசீர் அரபாத் இஸ்ரேல் தமது நிலைகள் மீது நடத்தும் தாக்குதல்களை அவதானிக்க பார்வையாளர்களை உலக நாடுகள் அனுப்பிவைக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்

### ஆயுதங்களை அகற்றுக

ஊடுருவலிலிருந்தும் வாபஸ் பெறுவதுபற்றி இஸ்ரேல்தெரிவிக்கையில் பாலஸ்தீனகொரில்லாக்கள் அவை வைத்திருக்கும் ஆயுதங்களைக் கைவிடும் பட்சத்திலேயே தாம் ஆக்கிரமித்த பகுதியிலிருந்தும்வாபஸ் பெறுவோம் உனத் தெரிவித்துள்ளது.

### வெளிநாடுகளிலும் மோதல்

இஸ்ரேலியர்களுக்குப் பாலஸ்தீனர்களுக்கும் தென்லெபனுனில் போர்நடைபெற்றுவரும் இதேவேளை இத்தாலியிலுள்ள இருதரப்பு ஏஜண்டுகளும் மோதலில் இறங்கியுள்ளன.

ரேமில் இஸ்ரேலிய மாணவர் ஒருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள பலஸ்தீனப் பிரதிநிதியின் மோட்டார் கார் பலத்த குண்டு வீச்சுக்கு இலக்கானது. இத்தாக்குதலுக்கு இஸ்ரேலிய ஏஜண்டுகளே காரணமெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

---

கொமெய்னியின் புதல்வரின்

## கார்மீது குண்டுவீச்சு துப்பாக்கிப் பிரயோகம்!

தெஹ்ரான் ஜூன். 19

ஈரானின் மத ஆட்சியாளரனே ஆயத்தொல்லா கொமெய்னியின்மூத்தபுதல்வரான அஹமத்தின் மோட்டார் கார் கைக்குண்டுத்தாக்குதலுக்கும், இயந்திரத்துப்பாக்கிப்பிரயோகத்துக்கும் இலக்கானது.

இச்செய்தியை வெளியிட்ட தெஹ்ரான் பத்திரிகையான 'எட்டெல்லா' தெஹ்ரானின் மத்தியிலுள்ள வீதியொன்றில் கொமெய்னியின் புதல்வரது மேஸெடெஸ்பென்ஸ் கார் நிறுத்தப்பட்டிருந்தபோதே தாக்குதலுக்குள்ளானதென்றும், துப்யாக்கி ரவைகள் உட்புகாதவாறு கார் அமைக்கப்பட்டிருந்ததனுல் சேதம் எதுவும் பெரிதாகவிருக்கவில்லையெனவும் தெரிவித்தது.

இத்தாக்குதல் நடைபெற்ற வேளை அஹ்மத் காரில்இருக்கவில்லை. சாரதி மட்டுமே காரில் இருந்தார். ஆனுல் அவருக்கு எதுவித விபரீதமும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

'முஜாஹதீன்' என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சிலரே இத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றனரென்று', இவ்வியக்கத்தைச் சேர்ந்த சுமார் 2000 பேரை கொமெய்னியின் அரசாங்கம் தூக்கிலிட்டுக் கொன்றமை குறிப்பிடத்தக்கது. (கி)

---

ரோமில்

## வன்முறைச் சம்பவங்கள் இருவர் பலி!

ரோம், ஜூன் 19

ரோமாபுரியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பலஸ்தீனிய அதிகாரியொருவரும், மாணவரொருவரும் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

பலஸ்தீனிய அதிகாரி பயணம்செய்த காருக்குள் வைக்கப்பட்ட குண்டு வெடித்தமையினுலேயே அவர் பலியானதாகக் கூறப்பட்டது

மூவர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது, இத்தாலியில் மருத்துவபடிப்பை மேற்கொண்டுவந்த பலஸ்தீனிய மாணவன் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

---

## தீவைப்புச் சம்பவங்கள்

சென்னை, ஜூன், 19

தமிழ்நாட்டிலுள்ள கடையநல்லூரில் மூன்று தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாக கூறப்பட்டது.

இச்சம்பவங்களினுலேற்பட்ட சேதங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (வெ)

---

புதிய ஜனுதிபதி கூற்று

## அவசியம் ஏற்பட்டால் மீண்டும் யுத்தம்

புவனஸ்அயர்ஸ் ஜூன் 19

போக்லண்ட் தீவுகளில் போராட்டம் இப்போதைக்கு நின்றுவிடாது: அவசியம் ஏற்படின் அங்கு மீண்டும் யுத்தம் நடத்தவும் ஆர்ஜன்டீனு தயங்காது.

இவ்வாறு ஆர்ஜென்டீனுவின்புதிய ஜனுதிபதிஜெனரல் கிறிஸ்டீனு நிக்கலாய் தெரிவித்துள்ளார்.

போக்லண்ட் தீவுகளில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட ஆர்ஜென்டீனு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினுர்.

போக்லண்டில் ஆர்ஜென்டீனப் படைகள் பிரிட்டிஸ் படைகளிடம் சரணடைந்ததையடுத்தே முன்னைய ஜனுதிபதி திரு. கல்டேறி பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டு முன்னுள் உள்துறை அமைச்சர் திரு கிறிஸ்டீஞ் நிக்கலாய்டெஸ் ஜனுதிபதியாகப் பதவி ஏற்ருர்.

# நோய்த் தடுப்பு மருந்துகளை கட்டுப்பாடின்றி பாவிக்கலாமா?

நோய்த்தடுப்ப மருந்துகள் கட்டுப்பாடற்றமுறையில் பாவிக்கப்படுவதனுல் நோக்கிருமிகள் வீரியம் பெற்றுமேலும்நோய்பெருகுவதற்கு வழிவகுக்கின்றது. இம் மருந்துகளை சாதாரணப் பொதுமக்கள் மட்டுமல்ல வைத்தியர்களும்கூட கட்டுப்பாடற்றமுறையில் பாவிக்கிருர்கள் என்பது ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. யாழ். பல்கலைக்கழக நுண்ணுயிர்ப் பகுதி, தாவர இயல்துறையைச்சேர்ந்ததிரு.ரி விஞயகமூர்த்தி இதுபற்றி ஆராய்ந்து வருகின்ருர். நோய்த்தடுப்புத்துறையுடன் சம்பந்தப்பட்ட, சகலருக்கும், குறிப்பாக உயர்வகுப்பு மாணவர்களுக்கும், வைத்தியத்துறையினர்க்கும் இவரது ஆலோசனை பயன்தரும் என்ற நோக்கில் அவர் எழுதும் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. —ஆர்]

- ரி. விஞயகமூர்த்தி -

சல்பனேமைட்டைக் கண்டுபிடித்த காலம்தொட்டு நுண்ணுயிர்த் தொற்றை எதிர்ப்பதற்கான மருந்தின் உபயோகம் ஆரம்பமாயிற்று இதனைத்தொடர்ந்து பென்லிய நோற்றேற்றம் (Penicillium notatum) எனும் பொதுப் பூஞ்சணத்தால் உற்பத்தியாகப்படும் பென்சிலின் எனும்புதிய இரசாயனசேர்வை கண்டுபிடிக்கப்பட்டது. 1929ம் ஆண்டு பிளெமிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது நுண்ணுயிர்க் கொல்லி இதுவாகும். காலப்போக்கில் நுண்ணுயிரால் ஏற்படுத்தப்படும் தொற்றுநோய்களின்சிகிச்சைக்காகசெயற்கை நுண்ணுயிர் – கொல்லிகளும் (குளோறம் பெனிகோல்), பகுதி செயற்கையான (அம்பிசிலின்) நுண்ணுயிர்–கொல்லிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ஒருசில ஆண்டுகளுக்கே நுண்ணுயிர்–கொல்லிகளைப் பயன்படுத்திச் செய்யும் சிகிச்சை வெற்றியளித்தது. அதன் பின்னர் உபயோகத்திலிருந்த நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு எதிராக பற்றீரியங்கள் தடுப்பை அபிவிருத்திசெய்தன. 1955ம் ஆண்டில் யப்பான் தேசத்தில் தனிப்படுத்தப்பட்ட சிக்கெலா (Shigella) வயிற்ருேட்டத்தை ஏற்படுத்துவது சல்பனேமைட்டுக்கு எதிர்ப்பைக் கொண்டிருந்ததுடன் 1956ம் ஆண்டிற்குப் பின்னர் இந்த எதிர்ப்பு 80 சதவீதம்ஆக அதிகரித்தது. இதன் பின்னர் ஏனைய நுண்ணுயிர் கொல்லிகளான ஸ்ரெப்ரோமைசின் (Strepromycin), ரெற்ருசைக்கிளீன் (Tetre–cyclin) போன்றவை பரவலாக பயன்படுத்தப்பட்டதுடன் ப்பானில் நுண்ணுயிர் கொல்லி மருந்திற்கான எதிர்ப்பின் அளவு புள்ளிவிபரத்திற்குரிய அதிகரிப்பைக்காட்டியது. விற்ருேவிலும் (Vitro), மனிதன் உட்பட ஏனைய உயர் மிருகங்களின் குடல்களிலும் நுண்ணுயிர் கொல்லி மருந்துக்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட எதிர்ப்புத் தன்மை ஒரு நுண்ணுயிரில் இருந்து இன்னென்றிற்கு மாற்றப்படக் கூடியது என்பதனை அக்கிபா என்பவரினுல் யப்பானில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் வெளிக்காட்டியுள்ளன. நுண்ணுயிர் கொல்லிக்கு எதிரான தடுப்பானது ஒரே இனத்தை சேர்ந்த அங்கத்தவர்களுக்கிடையே மட்டுமல்லாமல், வேறுபட்ட பற்றீரிய இனங்களுக்கிடையேயும் மாற்றப்படக்கூடியது.

இந்நுண்ணியிர் – கொல்லித் தடுப்பானது எவ்வாறு மாற்றப்படுகின்றது? பற்றீரியாக்கள் புருேகரியோற்று எனப்படும் மிக ஆதியான கூட்டத்தைச் சேர்ந்தவையாகும் இக்கூட்டத்தைச் சேர்ந்த அங்கிகளில் பெரும்பாலானவை தனிக்கலத்தால் ஆக்கப்பட்டிருப்பதுடன் எளிய கல அமைப்பையும் கொண்டு காணப்படும். கருவானது எளிய வட்டமான நிறமூர்த்தத்திஞல் ஆக்கப்பட்டிருப்பதுடன், நுண்ணுயிர்க்கொல்லிகளுக்குத்தெரிவிக்கும் எதிர்ப்பு உட்பட, கலத்தின் வெவ்வேறு [அல்லது பல தரப்பட்ட] இயல்புகளையும் தீர்மானிக்கின்றது. இதைவிட நிறமூர்த்தத்தின் சிறிய பகுதிகள், மேலதிகநிறமூர்த்த உடல்களாகளாக சூழியவுருவில் அமைந்து காணப்படும். இவ் உடலானது பிரதான நிறமூர்த்தத்தை ஆக்கிய அதே DNA மூலக்கூறிஞல் ஆக்கப்பட்டிருப்பதுடன் பிளாஸ்மிட் (Plasmid) எனவும் அழைக்கப்படும். இதுவும் வட்டமான அமைப்புடையதாக, வெவ்வேறு பருமனில் காணப்படுவதுடன் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்குக் காட்டும் எதிர்ப்பு உட்பட வேறுபட்ட இயல்புகளையும் தீர்மானிக்கின்றது. இவை பிரதான நிறமூர்த்தத்துடன் ஒன்றுசேரக் கூடியதாகவும் அதிலிருந்து பிரிக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது. ஒரு கலத்தில் 10–15 பிளாஸ்மிட்டுக்கள் காணப்படலாம். இவை பற்றீரியாவிலுள்ள கச்சம் [Pili) என்றழைக்கப்படும். புணர்ச்சிக் குழாயினூடாக ஒரு பற்றீரியாவில் இருந்து இன்னுமோர் பற்றீரியாவுக்கு இடமாற்றப்படுகிறது. பிளாஸ்மிட்டுக்கள் இடமாற்றப்படுதல் பிரதான நிறமூர்த்தத்தில் தங்கியிருப்பதுடன் அடிக்கடி நடைபெறுகின்றது.

## தடுப்பபை விருத்திசெய்தல்

பற்றீரியங்கள் தன்னிச்சையாக தோன்றும் விகாரத்திஞலோ இன்னுமோர் பற்றீரியத்திலிருந்து பிளாஸ்மிட்டுக்களை கைப்பற்றுவதன் மூலமோ தடுப்பை (அல்லது எதிர்ப்பை) விருத்தி செய்கின்றன. இயற்கையில், நுண்ணுயிர் கொல்லிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற பற்றீரியங்களும் காணப்படுகின்றன. நுண்ணுயிர் கொல்லிகளின் பயன்பாடு உணர்ச்சியுள்ள பற்றீரியங்களைக் கொல்வதன் மூலம்தடுப்புவகையை மட்டும் தெரிவு செய்கின்றது பியாஸ்மிட்டுக்கள் நுண்ணுயிர் கொல்லிக்குரிய எதிர்ப்பை (அல்லது தடுப்பை) தீர்மானிப்பவற்றை மட்டுமல்லாது, வீரியம் போன்றவேறு இல்புகளுக்குரிய எதிர்ப்பை (அல்லது தடுப்பபை) தீர்மானிப்பவற்றையும் மாற்றுகின்றது. எனவே நுண்ணுயிர்க்குரிய மருத்துவமுறை எதிர்ப்புவகை (அல்லது தடுப்புவகை) பற்றீரியாக்களை மட்டுமல்லாது வீரியமுள்ள பற்றீரியாவையும் தெரிவுசெய்கின்றது. மனிதனிலும், சமூகத்திலும் இவ் எதிர்ப்பு அல்லது தடுப்பு எவ்வாறு செயற்படுகின்றது? சிறுநீரகக் கால்வாய் [Urinerry Tract] தொற்றுதலுக்குள்ளான [சல்பனேமைட்டுக்கு உணர்ச்சி உள்ள பற்றீரியாவினுல் ஏற்படுகின்றது.) ஒருவருக்கு சல்பனேமைட்டினுல் சிகிச்சை அளிக்கும்போது அவர் குணமடைகிருர். ஆனுல் E–Coll, Aerobactor போன்ற நோய் விளைவிக்காத குடல் வாழ் தடுப்பு பற்றீரியாக்கள் தெரிவு செய்யப்பட்டு அவரினுல் காவப்படும். தொடர்ந்துஇவர் நெருப்புக்காய்ச்சலினுல் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டால், இது Salmonella Typhi என்ற பற்றீரியத்திஞல் தோற்றுவிக்கப்படுகின்றது) தடுப்புபிளாஸ்மிட்டுகள் தெரிவுசெய்யப்பட்ட E–coli தடுப்பு பற்றீரியங்களில் இருந்து நடலில் காணப்படும் Samonella Typ–hiக்கு மாற்றப்படுவதற்கு கூடுதலான வாய்ப்பு உண்டு. எனவே இதன் மூலம் சல்பனேமைட்டுக்குரிய எதிர்ப்பை தீர்மானிப்பவை Salmonella Typhiக்கு மாற்றப்பட்டுவிடும். அநேகமான பிளாஸ்மிட்டுக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிக்குரிய தடுப்பைத் தீர்மானிப்பவற்றைக் காவுகின்றன குளோறம் மெனக்கோல், அம்பிசிலின் போன்ற நுண்ணுயிர்க்கொக்குக்குரிய எதிர்ப்பை தீர்மானிக்கும் பதார்த்தம் ஒருங்கே அங்கிக்கு மாற்றப்படுமாஞல் நெருப்புக் காய்ச்சலுக்கு எதிராகசிகிச்சை அளித்தல் கஸ்டமான ஒன்ருகிவிடும். மனிதன் உட்பட பல உயர் விலங்குகளின் குடல் வாழும் சில நோய் விளைவிக்காத அங்கிகள், பிளாஸ்மிட்டுகளின் தேக்கிடமாக அமைவதுடன் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவி பின்சாதகமான தேர்வு அமுக்கத்தில் பெருக்கமடைகின்றன. இயற்கையில் தடுப்பு அங்கிகளின் பரவலுக்கு நுண்ணுயிர்க் கொல்லிகளின் பரவலான பாவிப்பும் அவை தடுப்பு அங்கிகளை தெரிவு செய்து அவற்லிலிருந்து தடுப்புத் தீர்மானிகளை மிக விரைவாக மாற்றும் தன்மையும் மூலகாரணமாகஅமைகின்றது.

## கட்டுப்பாடு இல்லை

ஸ்ரீலங்காவில் நுண்ணுயிர் கொல்லிகள் மிகக் கூடியளவில் பாவிக்கப்படுகின்றது. வருடாந்தம் பாவிக்கப்படும் ரெற்ருசைக்கிளின், குளோரம் பெனிக்கோல், அப்பசிலின் போன்ற நுண்ணுயிர்க் கொல்லிகளின் அளவுகள் முறையே 6500 கி. கி., 1200 கி கி., 1050 கி. கி. ஆகும். அநேகமான அரசாங்க மருத்துவமனைகளில் நுண்ணுயிர்களின் ஆய்வுக்குரிய போதுமான வசதிகள் இல்லை. யாழ். மாவட்டத்தில் பொது மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவ விடுதிகளிலுமாக தினமும் 1500க்குக் குறையாத நோயாளிகளுக்கு நுண்ணுயிர்க்கொல்லிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. ஒருதனியான தனியார் மருத்துவ விடுதியை விட, யாழ் பொது மருத்துவமனையில் தினமும் ஆகக் கூடியது 70 மாதிரிகளை கையாளக்கூடியதற்கு மட்டும் போதுமான வசதியுண்டு. எனவே அநேகமான நுண்ணுயிர்க் கொல்லிகள், மிக குறைந்த நுண்ணுயிர்க்குரிய அறிக்கையுடன் அல்லது எந்தவித அறிக்கையும் இல்லாமல் சிபாரிசு செய்யப்படுகின்றது. சரியான நுண்ணுயிர்க் கொல்லியைசிபார்சு செய்வதில்உள்ள சிரமத்தை தவிர்ப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகள் சிபார்சு செய்யப்படுவதால் அவற்றில்சில அல்லது எல்லாம் பயனற்றுப் போகின்றன. நாடு முழுவதும் இயங்குகின்றன நுண்ணுயிர்களின் ஆய்வுக்குரிய வசதிகளைக் குறைந்த அளவில் கொண்ட தனியார் பயிற்சி நிலையங்களில் இதுநன்கு அவதானிக்கப்பட்டுள்ளது. இத்துடன் சில நுண்ணுயிர்க் கொல்லிகள், மருத்துவரினுல் சிபார்சு செய்யப்படும் மருந்துக் குறிப்பு இல்லாமலேயே திறந்த சந்தையில் சுலபமாக விலை கொடுத்து வாங்கக் கூடியதாக உள்ளது. எனவே நுண்ணுயிர்க் கொல்லிகளை கட்டுப்பாடற்ற முறையில் பயன்படுத்துதல், தடுப்பு வகை பற்றீரியங்களையும், வீரியமுள்ள பற்றீரியங்களையும் தெரிவு செய்வதற்கு, வழிகாட்டுவதுடன் அவற்றின் தொற்றலுக்கு எந்த நவீன மருந்தும் விடையளிக்காத ஒரு நிலையையும் ஏற்படுத்துகின்றது.

யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையைச் சேர்ந்த நானும், சுவீடனைச் சேர்ந்த உப்சால பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறையினரும்நடாத்திய ஒன்றிணைந்த திட்டத்தில் தீவின் முழுப்பாகத்திலுமுள்ள மருத்துவமனைகளிலுள்ள நோய்ப்பகுதிக்குரிய ஆய்வுகூடங்களிலிருந்து ஏறக்குறைய 500 பற்றீரிய வளர்ப்புகள் தனிப்படுத்தப்பட்டு அவற்றின் தடுப்புத்தன்மையையும் மாற்றத்தகவையும் அறியும்பொருட்டு பரிசோதிக்கப்பட்டது. இவற்றில் 80 வீதமானவை அகன்ற நிறமாலைக்குரிய அம்பிசிலின் உட்பட ஒன்றுக்கு மேற்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளுக்குதடுப்பை [அல்லது எதிர்ப்பை] காட்டின இவற்றில் புள்ளிவிபரத்துக்குரிய வீதமானது தடுப்புத் தன்மையை பொதுவங்கிக்கு மாற்றுகின்றன. தனியாரின் நோய்ப்பகுதிக்குரியஆய்வுகூடங்களில் இருந்து தனிப்படுத்தப்பட்ட மாதிரிகள் (Multiple drug resistance) பன் மருத்துத் தடுப்பை மிகவும் கூடுதலான வீதத்தில் காட்டுவதுடன், கூடுதலான மாறற் தகவையும் காட்டுகின்றன. பொதுவாக நோயாளிகள் அவசியமின்றி தேவைக்கதிகமாக நுண்ணுயிர்க் கொல்

(5ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவம்: மேயர் மாநாடு கூட்டுகிருர்

[யாழ்ப்பாணம்]

அடுத்த மாதம் 25ம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசாமி ஆலய உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றை யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் செயற்குழு அறையில் இம்மாதம் 25ம் திகதி கூட்டவுள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோவில் எஜமான் மற்றும் வடபிராந்திய இ போ ச சபை, இலங்கை மின்சாரசபை, பொலிஸ்பகுதியினர், சென் ஜோன்ஸ் முதலுதவிப்படை, சாரணர் படை, யாழ் மாநகரசபை சுகாதாரப்பகுதி அதிகாரிகள், மாநகரசபையின் சைவசமய உறுப்பினர்கள் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. [சி—அ]

## கொழும்பில்

## தமிழகப் பேராசிரியரின் சமயச் சொற்பொழிவு

(கொழும்பு)

கொழும்பு, செக்கடித்தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இம்மாதம் 23 ம் திகதி புதன்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 2ம்திகதி வெள்ளிக்கிழமை வரை தமிழகப் பேராசிரியர் தா பால்வண்ணனுரின் சமயச் சொற்பொழிவு நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 'சன்மார்க்கம். பத்திரிகையின் ஆசிரியரும் பிரபல எழுத்தாளரும், பேராசிரியருமான பாவலர் பால் வண்ணனுர் குறிப்பிட்டதினங்களில் மாலை 7 மணி முதல் 8– 0 மணி வரை சொற்பொழிவு நிகழ்த்துவார். "ஆத்மஜோதி" ஆசிரியர் திரு நா. முத்தையா நிகழ்சியைத் தொடக்கிவைப்பார். (அ)

## 'எமது கடமை'


ஈழநா டென்னும் இனியநற் பத்திரிகை
வாழ வழிவகுக்கும் வாய்மையால்—தாழாமல்
நல்ல தமிழ் வளர்ப் போம் நாடியொற் றுமை
யாவோம்
மெல்லக் குழைவோம் வியந்து.

இளைய தலைமுறைகள் ஏங்கியே வாடாமல்
முளைக ளென வளர்ந்து முன்னுய்—வளையாமல்
பார்த்துப் பயனுடைப் பண்படுத்தல் மேலோர்கள்
சேர்த்துப் பணிசெய் சிறப்பு

காந்திஜீ ராஜாஜீ கற்பகமாம் நேருஜீ
சாந்தியாய்ச் சொன்ன சதுர்மறைகள்—
மாந்தியே
கேட்டிடுவீர் ஒன்ருய்க் கிளைத்திடுவீர் நாட்டிற்காய்
ஈட்டிடுவீர் சேவை இயைந்து.

பெரியர் இளைஞரெனப் பேதங்கள் பேசாமல்
அரிய கருமஞ்செய் தாற்றின்—எரிமுன்னும்
பஞ்சாகுந் திப்பகைகள் பாருஞ் சிறந்தோங்கும்
எஞ்சாது நிற்கும் இசை.

வை. க. சிற்றம்பலம்



சிலோன் டுபாக்கோ கம்பனியின் பிராந்திய விற்பனை முகாமையாளர் திரு. ஆர். எஸ். பி. அரியரத்தினம், விற்பனைப் பிரதிநிதி திரு. என். நவரத்தினம் ஆகியோர் யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் பொது நூலக புனரமைப்பு நிதிக்கு 10,000 ரூபாவிற்கான காசோலையை அன்பளிப்புச் செய்வதை படத்தில் காண்க. மாநகர சபை உறுப்பினர்களான திருவாளர்கள் யோ. அ. செல்வநாயகம், எஸ். சிவரத்தினம், கே. எட்வேட் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## "கல்வியால் அறிவும் விளையாட்டில் உடல் வலுவும் கிடைக்கும்"

(அரியாலை)

"கல்வியில் மட்டுமன்றித் தேகாரோக்கியத்தைக் கொடுக்கக் கூடிய விளையாட்டுகளிலும் மாணவர்கள் போதிய திறமையும் காட்டவேண்டும். உடல் வளர்ச்சி பூரணமாக அமைந்தால்தான் உளவளர்ச்சியும் ஏற்படும். கல்வியின் மூலம் அறிவைக் கட்டியெழுப்பமுடியும். அதுபோலத் தேகப்பயிற்சியின் மூலமும் போதிய விளையாட்டுக்கள் மூலமே உடலை வலுப்படுத்த முடியும்"

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. சிலன் கதிர்காமர் யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற வாலிப பொழுது போக்கும் விளையாட்டும்" என்ற தலைப்பில் நடைபெற்ற வாலிப பொழுது போக்கும் விளையாட்டும்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில், தேசிய விளையாட்டுபயிற்சியாளர் திரு. ம. அ. தியாகராசா. முன்னை நாள் தேசியஉதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. வ. நடராசா, தேசிய பூப்பந்தாட்ட பயிற்சியாளர் திரு. அ. கனகராசா. திரு. பி. இராஜசூரியர் ஆகியோரும் பேசினர்.

யாழ். வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் ஏராளமான மாணவ - மாணவியர்கள் கலந்துகொண்டனர். (அ)

ரம்ஸானை முன்னிட்டு

## யாழ். முஸ்லிம்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றை முஸ்லிம் வட்டாரங்களில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள கூட்டுறவுக் கடைகளிலும் உத்தரவு பெற்ற வியாபாரிகளிடமும் ரம்ழான் பெருநாளுக்குத் தேவையான குத்தரிசி, பேரீச்சம்பழம், சவ்வரிசி, பால்ரின், பிஸ்கற், ரின்மீன் முதலிய பொருட்கள் நாளை திங்கள் முதல் 23-ந் திகதி வரை கிடைக்க ஆவன செய்மாறு யாழ். முஸ்லிம் சமூக சேவா சங்கம் அரச அதிகாரிகளிடம் கோரியுள்ளதையடுத்து இவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. [வண். - அ]

## மண்டைதீவு ம.வி.பொன்விழா ஆண்டுப்போட்டி

யாழ்ப்பாணம்)

மண்டைதீவுமகாவித்தியாலயத்தின்வருடாந்தஇல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 22ம் திகதி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வித்தியாலயத்தின்வைர விழா ஆண்டுப்போட்டியாக நடைபெறும் இந்த மெய்வல்லுநர் இல்லப்போட்டியாக நடைபெறுகிறது.

இந்த விளையாட்டுப் போட்டியிலும், பரிசளிப்பு விழாவிலும் ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ இரத்தினம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன், உடற்கல்வி அதிகாரி வி. தங்கராசா, மின்பொறியியலாளர் திரு. வி. வி. நவரத்தினராசா ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ப.மா. சங்கம் அமைப்பர்

(அரியாலை)

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## மனைவியின் வாரண்டில்

[கொழும்பு]

அரசாங்க ஊழியர் ஒருவர் தமது மனைவியின் பயண ஆணைச்சீட்டைப் பயன்படுத்தி இன்னுமொரு பெண்ணை முதலாம் வகுப்பு உறங்கல் படுக்கையில் தயத்தலாவைக்கு அழைத்துச் சென்று கொழும்பு திரும்பிய போது கோட்டை புகையிரத நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்.

இருவரையும் கொழும்பு கூட்டுநீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவரையும் தலா நூறு ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார். [சி]

வ. தெ. ப. கூட்டுறவுச் சங்க சமாஜம்

# பலம்வாய்ந்த சமூக அபிவிருத்தி இயக்கமாகும்

## செயலாளர் திரு. நடராசா தகவல்

(ஏ. வி. மாணிக்கம்)

பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வட பகுதி தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கசமாஜம், பலம் வாய்ந்த சமூக அபிவிருத்தி இயக்கமாக பிரகடனப்படுத்தவுள்ளதாக சமாஜ செயலாளர் திரு. க. நடராசா தெரிவித்தார். க. நடராசா பனம்பொருள் அபிவிருத்திசபைத் தலைவராகவும் இருந்துவருவது தெரிந்ததே.

18 தெ. ப. உ. வி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் முற்றவெளியிலும், திறந்தவெளி அரங்கிலும் சமாஜத் தலைவர் திரு. எஸ் நடேசு தலைமையில் வெகுகோலாகலமாக இந்த 10வது ஆண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறது.

இவ்விழாவில் தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் பயனுள்ள அரிய பல திட்டங்கள் வெளியிடப்படவிருக்கின்றன என்று தெரிவித்த சமாஜச் செயலாளர் திரு. நடராசா அவைபற்றியும் விளக்கிக் கூறினார்.

"35-40 வருஷ காலமாக இருந்துவந்த மரவரித்திட்டம் 1972 ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி தொடக்கம், சீவல் தொழிலாளர்களில் வருமானத்திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது.

"மரவரிகாலத்தில் அரசாங்கத்துக்கு 6—7 லட்சம் ரூபாகலால் வரியாக கிடைத்துவந்தது. வடபகுதியில் கூட்டுறவு முறை வந்ததும் 1981 ல் மட்டும் 69 லட்சம் ரூபா வரியாகக் கொடுத்திருக்கிறது. இது விற்பனவு மொத்தவரியாக வழங்கப்படுகிறது.

இப்பொழுது இந்த ஸ்தாபனம் நிதி திட்டமிடல் கூட்டுறவு அமைச்சுகளோடு சம்பந்தபட்டதாக இருக்கிறது.

7 ஆயிரம் சீவல் தொழிலாளர்களும் இதனையிட்டு ஆயிரம் ஊழியர்களும் பயனடைந்து வருகிறார்கள். இதனால் 10 வருடத்துக்குள் சமூக, பொருளாதார, கல்வி ஆகிய மூன்றும் குறிப்பிட்டளவுக்கு எமதுசமூகமத்தியில் மாற்றமடைந்துள்ளது. இத்தொழிலை நம்பி சீவிப்பவர்களுக்கு அதாவது அங்கத்தவர்களுக்கு அவசர நிதியுதவியும் வழங்கப்பட்டுவருகிறது. கட்டாய சேமிப்புத்திட்டம் ஒன்றையுப் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

கள் உற்பத்திபற்றி திரு. நடராசா தெரிவிக்கையில். சுமார் 20 ஆயிரத்துக்குட்பட்ட போத்தல் கள் விற்பனையாகிறது என்றும், ஒரு சீவல் தொழிலாளி சராசரி சாதாரணமாக 10 மரங்கள் சீவுவதாகவும், ஒரு பனையில் 70கலன் கள் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் சொன்னார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது: ஒரு நாளைக்கு 7,000 கலன் கள் உற்பத்தி செய்யப்படுகிறது. 1975ல் 200 கலன்களில் சாராயம் வடிக்கக்கூடிய தொழிற்சாலை ஒன்று கைதடியில் ஆரம்பிக்கப்பட்டு, இயங்கி வருகிறது. இதனால் ஒரு வருஷத்தில் 10 லட்சம் ரூபாவுக் குறையாதலாபத்தை வடிசாலை பெறக்கூடியதாக இருக்கிறது. மேலும் வடிசாலைத் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவதாகத் தெரியவில்லை இதுவிடயத்தில் அதிகாரிகள் அக்கறை செலுத்தவேண்டும். யாழ். மாவட்ட அபிவிருத்திசபை நடவடிக்கை எடுப்பதாக அண்மையில் தெரியவந்துள்ளதையிட்டுமகிழ்ச்சியடைகிறேன்.

"முழுக்க முழுக்க இந்தியாவைப்போல் கள்ளுற்பத்தியை நிறுத்தி, கருப்பநீராக மாற்றி அதிலிருந்து பயன்படக்கூடிய பானங்கள், கற்கண்டு சீனி போன்றவை உற்பத்தி செய்வது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

### தமிழ்நாடு அறிஞர் வருகை

தமிழ்நாட்டுக்கு இங்கிருந்து பனம்பொருள் ஆராய்ச்சிக்கு யாரையும் அனுப்புவதாக உத்தேசமில்லை. ஆனால் தமிழ் நாட்டிலிருந்து பனம்பொருள் அபிவிருத்தித்துறையில் அனுபவம் வாய்ந்த அறிஞர்களை இங்கு அழைத்து, இந்த நாட்டுக்குரிய முறையில் என்ன வகையில் பனம்பொருள் உற்பத்திகளை மேற்கொள்ளலாம் என ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவுள்ளோம். இத்துறையில் திறமையாளரான டாக்டர் சம்பந்தர் வரவுள்ளார். அவர் 6 மாதம் இங்கு தங்கி இருந்து ஆராய்ச்சிகள், பயிற்சிகள் செய்வார். இவர் தங்கி நிற்பதற்கான செலவுகளை ஏற்றுமதி அபிவிருத்திசபை பொறுப்பேற்கிறது.

வடபகுதி எம்.பி.க்கள் 15 வீதமாக இருந்த தெ. ப. உ. வி. சங்கம் 10வீதமாகக்குறைக்கவழிசெய்தார்கள்.

பிரதம மந்திரி வடபகுதிக்குவிஜயம் செய்த சமயம், சீவல் தொழிலாளர்களுக்கு விபத்து நலஓய்வூதியத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்தார். இதனால் ஒருவருஷத்துக்குள் 2 லட்சம் ரூபா விபத்தில் பாதிக்கப்பட்ட நூறு பேருக்கு வழங்கியுள்ளோம். 2 லட்சம் ரூபா அளவில் வங்கியிருப்பில் சட்டரீதியாக வைக்கப்பட்டுள்ளது.

சீவல்தொழில் விபத்தினால் மரணமடைபவர்களுக்கு 12 ஆயிரம் ரூபாவும், விபத்தில் அங்கவீனமுற்றவருக்கு குடும்பத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும் வழங்கிவருகிறோம்.

### சீனி உற்பத்தி வீழ்ச்சி

பதநீரிலிருந்து உற்பத்தி செய்யப்படும்சீனி தரமாயிருந்தால், அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து சீனி இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு சந்தைப்படுத்துவதால், பல ஆயிரம் ரூபா பெறுமதியான பனஞ்சீனி விற்பனை செய்யமுடியாமல் தேங்கிக்கிடக்கிறது.

1980ல் ஒன்றரைக்கோடி ரூபா வெளிநாடுகளுக்கு பனம்தும்பு ஏற்றுமதியால் அரசாங்கம் வருமானத்தை பெற்றிருக்கிறது.

இந்தசமாசம் வரையறுக்கப்பட்ட கூட்டுக்கம்பனி ஒன்றையும் ஆரம்பிக்கவுள்ளது." [மா]

# நோய்த்தடுப்பு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லிகளை உள்ளெடுப்பதன் மூலம் தமது தொகுதிகளில் தடுப்பு பிளாஸ்மிட்டுக்களை காவுவதே இதற்குக் காரணமாகும். மாநிலத்துக்குரிய மருத்துவ மனைகளில் இருந்து தனிப்படுத்தப்பட்ட பற்றீரிய வளர்ப்புகள் குறைந்த வீதத்தில் (Multiple drug resistance) பன் மருந்துத் தடுப்பையும் மாற்றற் றகவையும் கொண்டிருப்பது இதை வலியுறுத்துகின்றது. தேக்கிடத்தின் (பிளாஸ்மிட்டுக்களின்) தடுப்புத் தன்மையையும், மாற்றற் றகவையும் மதிப்பிடுவதற்கு ஆரோக்கியமான வயதுவந்தவர்களின் மல வளர்ப்புகளிலிருந்து (Stool culture) தனிப்படுத்தப்பட்ட குடல் வாழ் பற்றீரியாக்கள் பரிசோதிக்கப்பட்டன. பிளாஸ்மிட்டுக்கள் அவற்றை காவுகின்ற பற்றீரியங்களுக்கு சுமையாக இருப்பதுடன் வழமையாக அவை சந்ததிகளுடன் இழக்கப்படுகின்றன. ஆனால் நுண்ணுயிர்க் கொல்லிகள் உள்ளபோது அவை இரட்டிப்படைந்து சிறப்பு நிலையில் காணப்படும். நாட்டுப்புறங்களிலுள்ள வெவ்வேறு நீர் நிலைகளில் இருந்து எம்மால் சேகரிக்கப்பட்ட நீர்மாதிரிகளிலிருந்து தனிப்படுத்தப்பட்ட பற்றீரியங்களில் இதை தெளிவாகக் காணக்கூடியதாகஉள்ளது. இவ்வாறு தனிப்படுத்தப்பட்ட பற்றீரியாக்கள் இரண்டுக்கு மேலான நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு தடுப்புத்தன்மையைக் கொண்டிருந்தபோதிலும் அவை அனைத்தும் மாற்றும் தகவற்றது. இப்பற்றீரியங்கள் எந்த நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கும் நீண்டகாலம் உட்படுத்தப்படாததால் மாற்றற் றகவை இழந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

### கட்டுப்படுத்துவது மிகமுக்கியம்

எனவே நுண்ணுயிர் கொல்லிகளைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவது மிக முக்கியமானதாகும். இது பின்வருமாறு நிறைவேற்றப்பட முடியும்.

1. திறந்த சந்தையில் நுண்ணுயிர்க் கொல்லிகளை கொள்முதல் செய்வதில் (அல்லது வாங்குவதில்) கண்டிப்பான கட்டுப்பாட்டுடன் வேண்டும். அத்துடன் நுண்ணுயிர்க் கொல்லிகள் தகுதியுள்ள பதிவு செய்யப்பட்ட நபரால் விற்கப்படவேண்டும்.

2. அரசாங்க மருத்துவ மனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் பூரணமான நுண்ணுயிர்க்குரிய அறிக்கையுடன் (அவசரமானநிலைமையைத்தவிர) நுண்ணுயிர்க் கொல்லிகள் நோயாளிக்கு சிபாரிசு செய்யப்படவேண்டும். இதற்கு வெவ்வேறு மாநில ஆஸ்பத்திரிகளிலும் உள்ள நுண்ணுயிர்பகுதிக்குரிய ஆய்வுகூடங்கள் தேவையான வசதியைக் (உபகரணங்களை) கொண்டிருத்தல் அவசியம் இத்துடன் நோய்ப் பகுதிக்குரிய ஆய்வு கூடங்கள் இல்லாத பிரதேசங்களில் இவை அமைக்கப் படவேண்டும்.

3. சமூகத்தில் தடுப்பு பிளாஸ்மிட்டுக்களின் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மாற்றக்கூடிய பிளாஸ்மிட்டுக்களின் விபரங்களை பதிவுசெய்தல் அவசியம்.

## வயோதிபர் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

மனைவியுடன் ஏற்பட்ட சச்சரவைத்தொடர்ந்து 63 வயது வயோதிபர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

வட்டுக்கோட்டை மேற்கைச்சேர்ந்த நாகமுத்து என்னும் பிரஸ்தாபநபரின் மரண விசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது. காலம் சென்றவரின் மனைவியும் சாட்சியமளித்தார்.

தமிழரின் சுயநிர்ணய

# உரிமைகள் பறிக்கப்படுவதை மக்கள் அங்கீகரிக்கவில்லை!

## அரசலிகிதர் சேவைச்சங்கத் தலைவர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப்பறிக்கும் வகையில் அரசாங்கம் எடுத்து வரும் அடக்குமுறை நடவடிக்கைகளை இந்நாட்டுமக்கள் அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்கள் மட்டுமல்ல ஜனநாயக மனித உரிமைகளை மதிக்கின்ற எந்த கட்சியோ, இயக்கமோ இதை ஏற்கமுடியாது''

இவ்வாறு அரசாங்கலிகிதர் சேவைச்சங்கத்தின் தலைவர் திரு. ஜி. டி. சவணதாசா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு.வ. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில் திரு. சவணதாசா தொடர்ந்து பேசுகையில்:

இன்று நாட்டில் நடைபெறும் அடக்குமுறைகளை ஒழித்துக்கட்டமுடியுமாயின் அது தொழிலாள சக்திமூலம் தான் முடியும் எனவே தான் தொளிலாளர் சக்திகள் ஒன்றுபடவேண்டிய கட்டத்திற்கு இன்று வந்துள்ளன.

இந்த அடக்குமுறைகளை கண்மூடித்தனமாக விட்டுச் கொடுத்துக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சியினர் ஒன்றுபட்டு எதிர்க்கமுடியாமல் இருக்கின்றது மிகவும் கவலைக்குரியதாகும்.

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள சிறிமா பண்டாரநாயக்கா கட்சியோ, தமிழர் கூட்டணிக்கட்சியோ, இதர எதிர்க்கட்சிகளோ ஒற்றுமையாக அடக்குமுறைகளை எதிர்க்காவிடில் நாட்டில் ஒருசர்வாதிகாரப்போக்கிற்கு இவர்களும் உடந்தையானவர்களாக வே கணிக்க படவுள்ளனர். பொது நோக்குடன் எதிர்க்கட்சிகள் தொழிலாள சக்தியுடன் இணைந்து ஒன்றுபடவேண்டும். தேர்தலுக்காக மட்டும் சோஷலிசம் பேசிவிட்டு சுயநலன்களைக் கட்டிக்காக்க அரசியல்நாடகம் நடத்துவது மக்களுக்குச்செய்யும் துரோகமாகும்

இன்று வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பரிதாபநிலையை உணரமுடியாத அரசியல் அடக்குமுறை வாதிகள் இதன்விளைவுகளை அனுபவித்தே ஆகவேண்டும்.

நாட்டில் இனியொரு பொதுத்தேர்தல் நடந்தாலும் அது ஜனநாயக முறையில் ஒழுங்காக நடைபெறுமா? அல்லது மாவட்ட சபைத் தேர்தல்களைப்போல் ஒழுங்கீனமான சம்பவங்களுடன் நடக்குமா என்பதை எமக்கு எதிர்க்கட்சியினர் உறுதிப்படுத்திக் கூறமுடியுமா? இதைஉறுதிப் படுத்தமுடிமா? இதை உறுதிப் படுத்தமுடியாத நிலையில் எமது நாட்டில் எதிக்கட்சிகள் இருக்கின்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த நாட்டில் முதலாளித்துவ அடக்குமுறை ஒன்றுக்கு எமது மக்கள் வழிவிட்டுக் கொண்டு செல்வது மிகவும் கவலைப்படவேண்டிய தொன்றுகும். என்றார்.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் ஒருமைப்பாட்டுக்குழு ஒன்றும் தெரியப்பட்டது. (வண. நிரு)

## மணிவாசகர் குருபூசை

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயமும் பாலர் ஞானோதய சங்கமும் இணைந்து நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசைவிழா இம்மாதம் 25ம் திகதி ஞானோதய வித்தியாசாலைமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்புச் சொற்பொழிவுகள் அன்னதானம், என்பன விழாவில் இடம்பெறும்.

கூத்தியவத்தை சனசமூக நிலைய ஆதரவில் கூத்தியவத்தை விநாயகர் ஆலயத்தில் மணிவாசகர் விழா இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளது.

விசேட அபிடேக ஆராதனைகள், பொங்கல் என்பனவற்றுடன் மணிவாசகர்வீதியுலாவும் விழாவில் இடம்பெறவிருக்கின்றது.

## "பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்"

### கல்வி அதிகாரி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''ஒருபாடசாலையின் உயர்ச்சி அப்பாடசாலையின் அதிபரது நிர்வாகத் திறமையில் தான் பெரிதும் தங்கியுள்ளது. இவ்வுண்மையை இப் பாடசாலை அதிபர் திருமதி ஜே தவராசா நிரூபித்துக் காட்டியுள்ளார்''



இவ்வாறு கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் திருநெல்வேலி ஞே. க. த. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஒயவு பெற்றுச் செல்லும் திருமதி ஜே த்வராசாவை பாராட்டு முகமாகப் பெற்றூர் ஆசிரியர்மாணவர்கள்இணைந்து அளித்த பிரிவுபசார விழாவில் நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. சு. சிவநாயக மூர்த்தி உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது ''மிகச் சிறிய பாடசாலையாக இருந்த இப்பாடசாலையை மாடிக்கட்டடத்துடன் கூடிய பாடசாலையாக மாற்றிய தோடல்லாமல் சிறந்த கல்விச் சாலையெனப் பலராலும் பாராட்டப்பட வைத்து இதனுல் கணிசமான அளவு மாணவர்களின் தொகையையும் உயர்த்த வழிவகுத்த இவர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் இருபத்து நான்கு ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். ஆரம்பப் பாடசாலையாக இப்பாடசாலை இருந்த போதிலும், வட்டாரத்தில் நடைபெறும் இசை நடன நாடகப் போட்டிகளில் பரிசில்கள் பெற்று வருதல், வருடா வருடம் பல பிள்ளைகள் 5ம் தரப்புலமைப்பரிசில் பற்று வெளியேறுதல் போன்றவை இப்பாடசாலையின்சிறப்புக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. அதிகாரத்திஞலல்லாது அன்பிஞல் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கவர்ந்த அதிபர் திருமதிஜேதவராசா ஆசிரியப் பணியினின்றும் ஒய்வு பெறும் போதும் தொடர்ந்தும மக்களுக்குச் சேவையாற்றும் பெருநோக்குடன்விவாகப் பதிவுசாரராகப்பதவிபெற்றுச் செல்கிறுர் என்பதை அறியும்போது மகிழ்ச்சி தருகிறது'' என்றூ.

ஒய்வுபெற்ற அரசாங்களழுதுவினைஞர் திரு வே. குமரகுரு தனது உரையில்: ''இப்பகுதி மக்கள் என்றும் மறக்க முடியாத வகையில் பாடசாலையை சீரான நிலைக்கு உயர்த்தியவர் ஒய்வுபெறும் திருமதி ஜெ. தவராசா'' எனறு தெரிவித்தார்.

பெற்ருர் சார்பில் உரையாற்றிய திரு பொ சின்னத்துரை: ''எமது பிள்ளைகளைக் கல்வித் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறைகளிலும் முன்னேற்றிய அதிபரை பாராட்டாமல் இருக்க முடியாது'' என்ருர்.

திருமதி ஜெ. தியாகராசா, திரு இ. குமாரசாமி, ச. சிவானந்தன், ப. மகேஸ்வரன், கி. சாமுவேல் ஆகியோரும் அதிபரின் சேவையை பாராட்டிப் பேசினர். திரு. செ குஞ்சிதபாதம்நன்றியுரைகூறினுர்.

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(கரவெட்டி)

மந்திகை இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று இன்று மந்திகை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இ. தவேந்திரன் தலைமையில் நடைபெறும். இக் கருத்தரங்கில் பலிபீடம் பிரச்சாரகத்தைச் சேர்ந்த க. தேவதாஸ், ஈழமாணவர் பொதுமன்றத்தைச் சேர்ந்த மு.டேவிற்சன், கோவைமகேசன், தமிழ்மக்கள் ஜனநாய முன்னணியைச் சேர்ந்த சாருமதி, தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த இரா. வாசுதேவா, ஈழவேந்தன், இளைஞர் பேரவை விடுதலை அணியைச் சேர்ந்த செ. யோகநாதன், தமிழ் டாக்டர் தர்மலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

வடபகுதிக்கொள்ளைகள்:

## அடையாள அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறைப் பொலிசாரிடம் பயங்கர ஆயுதங்களுடன் சிக்கி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கொள்ளைக் கோஷ்டியினர்மீதான அடையாள அணிவகுப்பு இம்மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைக் கோஷ்டியை சேர்ந்த பெ சந்திரசேகரம், செ ஜெயபாலன், சி. சிவலிங்கம், சி. கமலநாதன், சி நாகராசா, கு. குகதாஸ், வி. கணேசலிங்கம், சி. ஸ்ரீகாந்தன் ஆகிய எண்மரும் கடந்த திங்கட்கிழமை மூடிய வாகனத்திடு பாதுகாப்பாகப்பருத்தித்துறை நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டனர்.

அடையாள அணிவகுப்புக்குத் தேவையான சாட்சிகள் சிலர் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்காதபடியால் அடையாள அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இக்கொள்ளைக் கோஷ்டியினர் வடபகுதியில் நடைபெற்ற பதினெரு துப்பாக்கிமுனைக் கொள்ளைகள் சம்பந்தமாக அடையாள அணிவகுப்புக்குட் படுத்தப்படுவார்கள்.

## விவசாயத்தில் நஷ்டம்: விரக்தியால் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

மாதகலில் இருந்து மாங்குளத்திற்குச்சென்று விவசாயத்தில் ஈடுபட்டுவந்த ஒருவர் விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் மனமுடைந்து கிருமிநாசினி அருந்திக்கொண்டார்.

மாதகலைச் சேர்ந்த 25வயதான வைத்தியநாதர் சிற்றம்பலம் என்பவரே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

காலம் சென்றவர் மாங்குளத்தில் கமம் செய்து வந்ததாகவும், அதில்போதிய வருமானம் கிடையாது நஷ்டம் ஏற்பட்டதால் கவலையடைந்து விரக்தியுடன் இருந்துவந்தார் என்றும் தமது மரணத்திற்கு தாமே பொறுப்பு என்று தமது கைப்படகடிதம் ஒன்றை அவர் மரணவிசாரணை அதிகாரிக்கு எழுதிவைத்துவிட்டுக் கிருமிநாசினி அருந்தி விட்டதாகவும் அவர் இறந்து மூன்று தினங்களின்பின்பே சடலத்தை குடிசை ஒன்றில் கிடைக்கண்டு பிடித்ததாகவும் மரணவிசாரணையில்சாட்சியங்கள்மூலம்தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## அமெ. தூதரக 1-வது செயலாளர் யாழ். வருகிருர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ளஅமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த முதலாவது செயலாளர் திரு. வில்லியம் எச். லிண்டி 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இம்மாதம் 22-ம்திகதி வரும் இவர், 23-ம்திகதி யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்வதுடன் 24-ம்திகதியாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. நடராசாவையும் யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையாவையும் சந்தித்து உரையாடுவார். (மா)

## நகர மண்டபத்தில் நூலகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுநூலகம் நகரமண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது. ஆரம்பத்தில் இந்நூலகம் கரடிப்போக்குசந்தியிலும்பின்னர் அபிவிருத்திச்சபை உப அலுவலக கீழ்மாடியிலும் நிறுவபட்டிருந்தது.

கோண்டாவில்

## டுவிஸ்ட் நடன சாதனை முயற்சி

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில்கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் செல்வன் அப்புத்துரை, தியாகராஜா நேற்று முன்தினம் வியாழன் பிற்பகல் ஒரு மணிமுதல் தனி ஒரு ஊக்குவிப்பாளருடன் டுவிஸ்ட் நடன சாதனையை ஆரம்பித்துள்ளார் இதுஒருபுதியபாணி டுவிஸ்ட் நடனசாதனை எனத் தெரிவிக்கப் படுகின்றது.


மீண்டும் மலிவு விற்பனை!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்

* மின்சார உபகரணங்கள் * பாடசாலை உபகரணங்கள்
* வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கு

கெமிவிக்ஸ் - பைன்டர்கம் விநியோகஸ்தர்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள், மின்சார ஒப்பந்தகாரர்) கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8291

தலைமையகம் :

பேர்ள்லெட்ஸ் அம்பலவாணர் & சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு - 11
தொலைபேசி: 24821 — 28244

லெட்சுமி பவான்
97, ஒல்கொட் மாவத்தை
கொழும்பு-11
போன்: 24821

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள் இன்று மட்டும்
**Force 10 From Navarone**
21st and 22nd AIRPORT 80

ஸ்ரீதர் (யாழ். நகர்) 10-30, 2-00, 6-00, 9-30
**The Other Side of Midnight**
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கிலப்படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 6-வது வாரம
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை** (கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன் ★ கராத்தே மணி ★ ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
5-வது வெற்றி வாரம்



கமல் (இரட்டைவேடம்) சுஜாதா, அம்பிகா, தங்கவேலு, நாகேஷ்.
**கடல் மீன்கள்**
—கலர்—

வின்ஸர் (யாழப்பாணம) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி -- சௌகார்ஜானகி, முத்துராமன் நடித்த
பார் மகளே பார்

From 22-6-82 BRUCE LEE in
**THE GAME OF DEATH**

## வல்லைமுக் கொலைவழக்கு:

# "கைதிகளை ஆபத்திலிருந்து காப்பாற்ற அவர்கள் கைவிலங்கை அகற்ற உதவினேன்"

(புலோலி நிருபர்)

"சம்பவ தினம் சம்பவ இடத்தில் பஸ்ஸில் ஏறமுயற்சித்தவர் முகத்தைத்துணியால் மூடிக்கட்டியிருந்தார் என்பதைப்பொலிசாருக்குகொடுத்த வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டேன். என்று வல்லை முக் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த சிறைப்பாதுகாவலா எஸ். சுப்பிரமணியம் சட்டத்தரணி வி. என். நவரத்தினத்தினுல் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வரும் இக்கொலை வழக்கு விசாரணையில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சமயம் சாட்சி குறிப்பிட்டதாவது;

"சம்பவ இடத்தில் பஸ்நின்றதும் நான் பஸ்வண்டிக்குள்ளேயிருந்துகொண்டு பார்த்த போது சற்றுத் தூரத்தில் இடப்பக்கமாக இருந்த பற்றைக்குள்லிருந்து ஒரு வெடிச்சத்தம் கேட்டது பஸ்சாரதியை நான் கவனிக்கவில்லை. அவர் யாருடனுவது கதைத்தாரா என்பதையும் நான் கவனிக்கவில்லை.

பஸ்ஸின் முன்பக்கவாசலால் ஏற எத்தனித்தவர் தனது முகத்தைத் துணியால் மறைத்துக்கட்டி கையில் துப்பாக்கியுடன் நின்ருர். கண்ணுக்குக் கீழ் மூக்கிலிருந்து கீழே மறையும்படி அவர் துணியால் கட்டியிருந்தார். அவரது நெற்றி தலை ஆகியவற்றையும் அவரது நிறத்தையும் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

"சம்பவதினம் நான் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தேன். முன்புதெரியாத ஒருவரைப்பற்றி விபரிக்கும்போது அந்நபரின் அங்க அடையாளங்களை வாக்குமூலத்தில் கூறியிருப்பேன். அவ்வேளையில் பஸ்ஸில் ஏற எத்தனித்தவரின் முக்கிய அடையாளம் அவர் முகத்தை மூடிக்கட்டியதே. அவர் முகத்தை மூடிக்கட்டிய துணிஎன்னநிறமானதென்பது தெரியாது. ஆனால் வெள்ளையாக இருக்கலாம், அவர்தனது முகத்தைத்துணியால் மூடிக கட்டியிருந்தார். என்பதை பொலிசாருக்குக் கொடுத்த வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் அவ்வாக்கு மூலத்தில் பொலிசாருக்கு அதைக் கூறியது எனக்கு ஞாபகமிருக்கின்றது.

"அவரின் முகத்தில் தாடி இருக்கவில்லை. ஆனால் மீசையிருந்தது. பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் அவரின் முகத்தில் மீசை இருந்ததெனச்சொன்ன ஞாபகமில்லை. வாக்குமூலம்கொடுத்த நேரத்தில் பஸ்ஸில் ஏற எத்தனித்தவரின் முகத்தில் மீசையிருந்தது. அதனை பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டேனு இல்லையா என்று எனக்குச்சரியாக ஞாபகமில்லை. வாக்குமூலமெடுத்த பொலிசார் அவரது அடையாளங்கள்பற்றிக் கேட்டார்கள். அவரது முக்கிய அடையாளம் மீசையிருந்ததாகும். அவருக்கு மீசை இல்லாத படியால் தான் அந்த அடையாளத்தை வாக்கு மூலத்தில் குறிப்பிடவில்லை. என்பதை மறுக்கிறேன்.

(நீதிமன்றத்திலிருந்த 9ம் எதிரி எழுப்பிக்காட்டப்படுகிருர்)

சம்பவதினம் பஸ்ஸுக்குள் ஏற எத்தனித்தவரைக்கண்ட போது அன்று 9வது எதிரிக்கு இருக்கும் தலைமயிர் அமைப்பு இருக்கவில்லை, பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்த போது அவரின் நிறத்தைப்பொலிசாருக்குக் கூறினேன். நிறத்தைப் பொலிசாருக்கு கூறவில்லையென்பதை மறுக்கிறேன்.

"நான் முன்பு சாட்சியமளிக்கும்போது பஸ்ஸில் ஏற எத்தனித்தவர் 9வது எதிரியைப் போல என்றும் ஆனல் நிச்சயமாகக் கூற முடியாதென்றும் கூறியுள்ளேன் நான் இவ் வழக்கில் சாட்சியமளிப்பதற்கு 7மாதங்களுக்கு முன்பு 9வது எதிரியைப்போல ஒருவர் தான் பஸ்ஸுக்குள் ஏற எத்தனித்தார் என்று நினைத்தேன்.

"எமது உத்தியோக தோரணையில் எமது பொறுப்பில் தனிப்பட்ட தினக்குறிப்புப்புத்தகம்எமக்குத்தரப்படவில்லை ஆனல் கடமைக்குப்புறப்படும் போது புறப்படும் சுநதோரில் கையெழுத்திட்டும், அடையும் சுந்தோரில் கையெழுத்திட்டு வருவது எமது வழக்கம்.

"அன்றைய தினம் எனது பொறுப்பில் கொண்டுவரப்பட்ட விளக்கமறியல் கைதிகளுக்கு என்னநடந்தது என்ற விஷயத்தை பருத்தித்துறை மறியல் சாலைக்கு வந்ததும் அங்கிருந்த புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளேன். பருத்தித்துறை சிறைச்சாலையில் கடமையாற்றும் நான் எனது கடமையிலீடுபட்டிருக்கும்போது நடக்கும் சம்பவங்களை அதற்கெனவைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிடுவதுண்டு.

சட்: சம்பவதினம் நீர் அவரைக்கண்டபோது உமக்கும் அவருக்கும் இடையில் வேறு யாரையாவது கண்டீரா?— இல்லை.

சட்: அவர் ஏதாவது சொன்னரா?—இல்லை.

சட்: அந்தநேரத்தில் அவருடன் வேறுயாராவது நின்ருர்களா?— பஸ்ஸுக்கு சுற்றிவரவும் வேறுநபர்கள் நின்ருர்கள்.

சட்: அந்நபரை முதல் முதலாக நீர் எவ்வளவு தூரத்தில் கண்டீர்?— 10அடி தூரத்திலிருந்து பஸ்ஸை நோக்கி வந்து கொண்டிருந்த போது அந்த நேரத்தில் முகமூடி போட்ட ஆட்களும் வேறுபலரும் அவ்விடத்தில் நடமாடிக் கொண்டிருந்தார்கள்?—நான் அந்த நேரத்தில் பஸ்வண்டிக்கு வேளியே என்ன நடந்தது என்பதைக்காணக்கூடியதாகஇருந்தது. நான் பஸ்ஸின்முன் மிதி பலகையில் நின்ற பொழுது அதே பக்கத்தில்பஸ்ஸிலிருந்து 10அடிக்கு அப்பால் அவரைக் கண்டேன். நான் முன்பக்கத்திற்குவர முன் பஸ்சில் ஏற முயன்ற நபரைக்காணவில்லை.

சட்: யாரயாவது பஸ்ஸை எடுக்கக வேண்டாமென்றுகூறியது கேட்கவில்லை?— இல்லை.

சட்; யாராவது பஸ்ஸை எடுத்தால் சுடுவேன் என்று கூறியதும் கேட்கவில்லை;—இல்லை. பஸ்சில் ஏறமுயற்சித்த நபர் அவரை நான் முதன்முதலாக கண்டபின்பு அவர் எக்கட்டத்திலும் பஸ்ஸை எடுக்க வேண்டாமென்று கூறியதை நான் கேட்கவில்லை.

சட்: எப்போ விளக்க மறியல் கைதிகளின் கைவிலங்கைக் கழற்ற வேண்டுமெனத் தீர்மானித்தீர்கள்?— பஸ் நின்றதும் பற்றைக்குள்ளிருந்து ஆட்கள் ஓடிவந்ததைக் கண்டபோது எனது பாதுகாப்பில் இருந்த சிறைக்கைதிகள் தங்களுக்கு ஆபத்துவருகிறதென்று சத்தம்போட்டதும் சக ஊழியரிடம் என்னிடமிருந்தகைவிலங்குத்திறக்குமாறு கூறிவிட்டு பஸ்சின் முன்பக்கம் சென்றேன் சம்பவதினம் இக்கைதிகளை யாழ். சிறைச்சாலையிலிருந்து கொண்டுவந்த ஊழியரில் நான்தான் சிரேஷ்ட ஊழியர்.

சட்: பஸ்சில் ஏறஎத்தனித்தவர் எக்கட்டத்திலும் சாரதியைப் பயமுறுத்தி பஸ்ஸை எடுக்கவேண்டாமென்று கூறவில்லை? —நான் காணவில்லை.

சட்: சாரதியை நோக்கி ஒருவர் துவக்கு நீட்டியதாகக்கூறினீர். அது வேறொரு நபர்!— ஆம்.

சட்: நிச்சயமாகக் கூறமுடியும்?—ஆம். ஏறமுயற்சித்த நபர் அல்ல அவர்.

சட்: அப்படிக்கூறியவர் பஸ்சின் எந்தப் பக்கத்தில் நின்ருர்?—பஸ்சிற்கு வெளியே சாரதியின் வலது பக்கத்தில்

சட்: அவர் துவக்கை நீட்டும் போது நீர் கண்டீர்?—ஆம்.

நீதிபதி வழக்கை இடைநிறுத்தினுர்.

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
ஆயிரம் ஜென்மங்கள்
இதுவே யாழ். நகரில் கடைசித் தடவை

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்
தர்மயுத்தம்

## இன்று பாராட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

மீசாலையைச் சேர்ந்த திரு. சி. வே. மார்க்கண்டுவுக்குச் சமாதான நீதவான் பட்டமளித்து அரசு கௌரமளித்தமையைப் பாராட்டி மீசாலை மக்கள் இன்று ஞாயிறு மாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் விழாவொன்றை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு சி மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும், நல்லூர் எம்.பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொள்கிருர். [சி]

## யாருடையது?

மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரமும், இன்சூரன்ஸ் சான்றிதழும் சரவணையைச் சேர்ந்த ச. தமிழ்நாதன் என்பவரால் இணுவில்— மருதனமடம் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

றீகல் சினிமா
யாழ். நகர்
தினசரி நான்கு காட்சிகள்
காலத்தை வெல்லும் கருத்தாழம் நிறைந்த இப்படம் புகழ்பெற்ற டைரக்டர்ஸ்ரீதர் அவர்களின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகியது.
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
நடிக்கும்



**மோகனப் புன்னகை**
(வண்ணப்படம்)
[இரு தடவைகள் தணிக்கை செய்யப்பட்டு உங்கள் உள்ளத்தைக் களிப்பூட்ட வரும் திரை ஓவியம்]
மற்றும் நடிகர்கள்
கீதா குமாரசிங்க (இலங்கை நடிகை), ஜெயபாரதி, பத்மபிரியா, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், அனுராதா

# ‘டுவிஸ்ட்’ நடனத்தில் உலகசாதனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக எம். சதாசிவம் எனும் இளைஞர் 154 மணித்தியாலங்களாகத் தொடர்ந்து ‘டுவிஸ்ட்’ நடனமாடி உலக சாதனையொன்றை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி சாதனை நிகழ்ச்சி யாழ். அமச்சூர் விளையாட்டுச் சங்கத் தலைவரான திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமையிலான மத்தியஸ்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இம்மாதம் 6-ந் திகதி நண்பகல் பகுதி கிராமசேவை அலுவலரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்சாதனை நிகழ்ச்சியை 12-ந் திகதி யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. சி. நாகராசா முடித்துவைத்தார்.

### ஆனைக்கோட்டையில் முயற்சி

ஆனைக்கோட்டை முன்னாள் பொலிஸ்நிலையம் முன்பாசு இரத்தினசிங்கம் என்றழைக்கப்படும் செ. ராஜன் என்பவர் இம்மாதம் 9 ந் திகதி புதன்கிழமையிலிருந்து ‘டுவிஸ்ட்’ நடனத்தில் சாதனையை ஏற்படுத்தும் பொருட்டு தொடர்ந்து ஆடி வருகிறார்.

இருபது வயதான இவ்விளைஞர் இன்றுவரை நடனமாடி ஆகக்கூடிய நேரம் தொடர்ந்து நடனமாடிய சாதனையை நிலைநாட்டுவார் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (சி-அ)

### பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கறிஞர்கள் ஆஜரானர்கள்.

இது இவ்வாறிக்க இந்த இளைஞர்களை பிணையில் விடுமாறு கோரி மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வது குறித்து வழக்கறிஞர்கள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

உமாமகேஸ்வரன் பிணை மனு மீதான தீர்ப்பு திங்கள் வெளிவந்த பின்னரே இந்த அப்பீல் மனு தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்கப்படுகிறது;

இந்திய சட்டத்தின்படி இவர்களைப்பிணையில் விடுமாறு கோரிமுதலில் மெற்றபொலிட்டன் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டபோது பிணை நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே.

# மரக் கடத்தல் வழக்கு: தலா 750 ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

தேங்காய்க்குள் முதிரை மாக் குத்திபலகை என்பவற்றை மறைத்து வைத்துக் கொண்டு வந்ததாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் இருவருககு தலா ரூபா 750 அபராதம் விதிக்கபபட்டது,

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த சோ. சிவநாதன், கச்சாய்வீதியைச் சேர்ந்த மு. தங்கராசா ஆகியோர்கள் 81 அக்டோபர் 16-ல் சட்ட விரோதமாக தேங்காய்க்குள் முதிரை வெட்டு மரங்களையும் பலகைகளையும் மறைத்துக் கொண்டுவந்ததாகக் கிளிநொச்சி வனபரிபாலனப் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ் பாலரஞ்சனல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்

நீதிபதி எம். எச். காரியப்பர் எதிரிகளுக்குத் தலா ரூபா 750 அபராதம் விதித்தார். லொறி பறிமுதல் சம்பந்தமான விடயம் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### இன்று வானொலியில்

[யாழ்ப்பாணம்]

பாஷைபூர் புனித அந்தோனியார் திருவிழா அன்று ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று இரவு 10 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபானத்தின் தமிழ்ச்சேவை ஒன்றில் இடம் பெறவுள்ளது.

### தலைவர் ராஜினமா

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ் இராசநாயகம் தலைவர் பதவியிலிருந்து திடீரென ராஜினமாச் செய்துள்ளார். (க)


## வெற்றிடங்கள்

- ✯ பொருத்துனர் **Fitters**
- ✯ ஒட்டுனர் **Welders**
- ✯ கொல்லர் **Black Smiths**
- ✯ தகரவேலையாளர் **Sheet Metal Workers**
- ✯ தச்சர் **Carpenters**

மேற்கண்ட பதவி வெற்றிடங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் வாய்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட துறை அனுபவம் மேலதிக தகைமையாகும்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**

காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. 3580


# துப்பாக்கிமுனையில் நகையும் பணமும் கொள்ளை!

[துணுக்காய்]

துப்பாக்கி முனையில் 10,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 2000 ரூபா ரொக்கப்பணமும் மல்லாகம் யோகபுரம் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகரான கிருஷ்ணசாமி கிளிநொச்சிக்கு சென்றிருந்த சமயம் அவரது வீட்டிற்கு சென்ற திருடர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அவரது பிள்ளைகளின் தங்க நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது

வீட்டுடன் சேர்ந்த அவரது கடைக்குள் புகுந்த திருடர் அவரது மனைவியிடம்சோடாக் கேட்டதாகவும் மனைவி நித்திரையை விட்டெழுந்து சோடா எடுக்க கடையை திறந்த போது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

அக்கடையில் உதவிக்கு படுத்திருந்த வயோதிபரையும் கத்தியை காட்டி திருடர்கள் பயமுறுத்தியதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மாங்குளம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

### கருணாநிதிக்கு இந்திரா பாராட்டு

சென்னை, ஜன. 19.

திராவிடமுன்னேற்ற கழக தலைவர் திரு. மு கருணாநிதியின் 25 வருடகால சட்டமன்ற சேவையைப்பாராட்டி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வாழ்த்து செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

திரு. கருணாநிதியின் 59வது பிறந்தநாள் விழாவை யொட்டி, இந்த வாழ்த்துச்செய்தி அனுப்பிவைக்கப்பட்டது.

இதேவேளையில் திரு. மு. கருணாநிதியின் 25 ஆண்டுகால சட்டசபை சேவையைப் பாராட்டியும் அவரது 59-வது பிறந்தநாளை ஒட்டியும் சென்னையில் நாளைஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பேரணியில் திரு. கருணாநிதியின் எடையின் இரண்டு மடங்கு எடையுள்ள வெள்ளிக்கட்டிகள் வழங்கப்படஇருக கிறது. [இ]

### “செம்மாங்கனி” வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

உலகின் 15 நாடுகளில் சேர்ந்த தமிழ்க் கவிஞர்களின் தொகுப்பு நூலாகிய ‘செம்மாங்கனி,யை நாளை திங்கட்கிழமை மாலை எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைப்பார்.

யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த நூல்வெளியீட்டு விழாவில் முதல்பிரதியை தொழிலதிபர் திரு. க. கனகராசா பெறுவார்.

இந்நூல்வெளியீட்டு விழாவில் வெளியீட்டாளர்களில் முதன்மையாளரான தமிழ் நாட்டைச்சேர்ந்த அழகதாஸ் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். இவ்வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை யாழ் எம். பி. திரு வெ யோகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார் (மா

### போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரிக்கப்படலாமெனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. அ நவரத்தினம்; தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி திரு. சிவசம்பு தவலிங்கம், மற்றும் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனித்தனர். [மா)

# தபால் சேவகர் வீட்டில் ஊர் மக்களின் கடிதங்கள்!

## திடீர் வேட்டையில் சிக்கின

[துணுக்காய்]

பொதுமக்களுக்குச் சேர வேண்டிய தபால்கள், கட்டுக்கட்டாக ஒரு தபாற்சேவகர் வீட்டில் தபாற் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. பாண்டியன்குளம் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாண்டியன்குளம் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து வந்த கடிதங்கள் அனைத்தையும் இப்பகுதியிலுள்ள தபாற் சேவகர் கட்டுக்கட்டாகத் தமது வீட்டில் வைத்துவந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாகச் சந்தேகப்பட்ட பொதுமக்கள் சிலர் தபாற் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து அவர்கள் தீவிரதேடுதல் வேட்டையை நடத்தியதைத் தொடர்ந்து இந்தத் தபாற் பைகள் கட்டுக்கட்டாகத் தபாற் சேவகர் வீட்டில் கைப்பற்றப்பட்டன.

குறிப்பிட்ட தபாற் சேவகர் தாம் தமது கடமையைச் செய்யவில்லை என்பதைத் தபாற் திணைக்கள அதிகாரிகளின் விசாரணையில் ஒப்புக் கொண்டதுடன், தமது வீட்டில் மறைத்து வைத்திருந்த தபாற் கட்டுகளையும் அவர்களிடம் கையளித்தார். திணைக்கள அதிகாரிகள் இவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இப்பகுதிப் பொது மக்களுக்குத் தெரிவித்துச் சென்றனர். விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. (அ)

### சிறிமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்தபிக்கு ஒருவர் என்னை அவதூறுக பேசியிருக்கிறார். இதுகவலைக்குரியது. இவ்வாறு நடந்துகொண்டவர்சாதாரண மனிதன் என்றால் நடவடிக்கை எடுக்க எமக்குக் கஷ்டமிருக்காது

அகிம்சை, கருணை, மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் தமது எண்ணங்களை வெளியிட்டமைக்கு எனது பாராட்டுக்கள்.

வேலையில்லாத் திண்டாடம் விலைவாசி அதிகரிப்பை தீர்க்க அரசு சகல நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது. (க-இ)

### புரட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்போவதில்லை. நாட்டின் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படவேண்டும்; அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே ஐக்கியதேசியகட்சியின் அரசியல் கொள்கையாகும்.

அடுத்த தேர்தல்களில் ஐக்கிய தேசியகட்சி தோல்வியுற்றாலும் சகல மக்களையும் சமமாக நடத்தும் கொள்கையிலிருந்து நாம் மாறமாட்டோம் நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலவ வேண்டும் என்பது தான் எமது கொள்கையாகும். அடிப்படை உரிமைகளுக்கு அரசியல் சாசனத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது.

#### கியூபா அதிபரின் கொள்கை...

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் கியூபா அதிபர் டாக்டர் பிடல்கஸ்ட்ரோவின் கொள்கையை பின்பற்றுமாறு சிலர் திருமதி சிறிமாவுக்கு ஆலோசனை கூறினார்கள் இன்று டாக்டர் கஸ்ட்ரோவே எமது கொள்கைகளை பின் பற்றுகிறார்.

### பிரிவுபசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜோதி சுவாமிகளின் தென்னிந்திய யாத்திரையை முன்னிட்டு நல்லூர் திவ்யஜீவன மண்டபத்தில் இன்று மாலை பிரிவுபசாரக் கூட்டமும் பஜனையும் நடைபெறவிருக்கிறது.

### இன்று மேடையேறும் இருநாடங்கள்

[யாழ்ப்பாணம்]

நாடக அரங்கக் கல்லூரியின் நாடகவிழா தொடரில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நா. சுந்தரலிங்கத்தின் ‘அபசுரம்’ ஞானியின் குருஷேத்திரோபதேசம் ஆகிய நாடகங்கள் நடைபெறவிருக்கின்றன.

### நடிகை ‘படாபட்’

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

காலமானார்.

25 வயதான இவர் கடந்த 4 நாட்களுக்கு முன் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மயக்கம் தெளியாத நிலையிலேயே நேற்று மரணமானர்,

“அவள் ஒரு தொடர்கதை முள்ளும் மலரும், ஆறிலிருந்து அறுபதுவரை உட்பட பல படங்களில் இவர் நடித்துள்ளார். [க]

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூன் மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/8.
Eelanadu—P. O. Box 49, Telegram: ‘Eelanadu’ T’phone: 389 and 8126.